PRGI (RNI) TNTAM/26/A7497

நேர்மையின் பாதை

புலனாய்வு தமிழ் இதழ்

NERMAIYIN PAATHAI

Price : ₹ 20/-

❖ மலர் : 01 ❖ இதழ் : 02 ❖ நவம்பர் 2026 ❖ Vol. : 01 ❖ Issue : 02 ❖ November 2026



பெண் ஆட்சியருக்குப் பாதுகாப்பில்லையா?

தவெக எம்.எல்.ஏ. விவகாரத்தில் அதிரடி விசாரணை!

சொகுசு முக்கியமா? மக்கள் பாதுகாப்பு முக்கியமா? விஜய்க்கு ஸ்டாலின் கண்டனம்

விண்ணை முட்டும் விலைவாசி: – எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு!

மனமார்ந்த நன்றி!





கடந்த அக்டோபர் மாதம் 24–ஆம் தேதி நடைபெற்ற “நேர்மையின் பாதை” பத்திரிகை வெளியீட்டு விழாவிற்கு வருகை புரிந்து சிறப்பித்த அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி!

குறிப்பாக, அனைத்து பத்திரிகை சங்க தலைவர்களுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், சமூக சேவகர்கள் மற்றும் விழாவிற்கு வருகை புரிந்த அனைத்து நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்கள் அனைவரின் அன்பும், ஆசியும், ஆதரவும் தான் “நேர்மையின் பாதை”யின் மிகப் பெரிய பலம். தொடர்ந்து துணையாக இருங்கள்.

அன்புடன்,

C.சந்தோஷ் – ஆசிரியர்,

நேர்மையின் பாதை

நேர்மையின் பாதை
புனைபெயர்வு தமிழ் இதழ்
NERMAIYIN PAATHAI Price : ₹ 20/-
PRGI (RNI) : TNTAM/26/A7497

ஆசிரியர் / வெளியீட்டாளர்:
C. சந்தோஷ்

கௌரவ ஆசிரியர்கள்:
A. வேல்முருகன், S. சரவணன்
C. பெஞ்சமின்

உதவி ஆசிரியர்கள்:
முனைவர் ஷீஜா. S
R. திருநாவுக்கரசு

மூத்த செய்தியாளர்கள்:
D. வெங்கடேசன்
K. வெங்கட்

செய்தியாளர்கள்:
A. முகம்மது மெஹபூப்
A. லெனின்
T. பார்த்தசாரதி
H.மன்னர் மன்னன்
சே.ரா. சண்முகம்

சட்ட ஆலோசகர்கள்:
Adv. S. சந்தன் பாபு, M.A., B.L., Egmore Court
Adv. V.R. சுதாகரன், M.A., B.L., D.M.E., Chennai High court
Adv. V. ஐயப்பன், B.A., LL.B., District Court, Nagercoil

Address:
No.6, Tharika Illam F1, Prakasam 1st Cross Street,
Vijayalakshmi Puram,
Ambattur, Chennai, Thiruvallur - 600053.
Contact: **63834 54437**
eMail: nermaiyinpaathai2026@gmail.com

இதழ் வடிவமைப்பு:
Tamilni Printz Graphics - 8754582123

The Press and Registration of Books Act-ன் படி செய்திகளின் தேர்வுக்கு ஆசிரியர் பொறுப்பாவார். கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. எல்லா வழக்குகளும் எழும்பூர் குற்றவியல் நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு "நேர்மையின் பாதை" நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்பு கட்டுரைகள் கட்டுரையாளரின் சொந்த கருத்துக்களே.

தமிழகம் எங்கே போகிறது?

வணக்கம்! இந்த நவம்பர் மாதத்தில், மனதை கனக்க வைக்கும் சில உண்மைகளை உங்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

1. அதிகரிக்கும் கொலைகள் - அச்சத்தில் மக்கள்

தமிழகத்தில் அன்றாடம் கொலைச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. சாதாரண தகராறு, முன்விரோதம், கள்ளக்காதல், கஞ்சா போதை என ஒவ்வொரு கொலைக்கும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. ஆனால் உண்மையான கேள்வி இதுதான்: மக்கள் நிம்மதியாக நடமாட முடியாத நிலை ஏன் வந்தது?

சட்டம் ஒழுங்கு என்பது வெறும் புள்ளி விவரம் அல்ல. இரவில் வீடு திரும்பும் பெண், கடை மூடிவிட்டு வரும் வியாபாரி, பள்ளி முடிந்து வரும் மாணவன் - அனைவரும் பாதுகாப்பாக உணர வேண்டும். அந்த நம்பிக்கை குறைந்து வருவது கவலைக்குரியது. காவல்துறையினர் கடுமையாக உழைக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. ஆனால் குற்றம் நடந்த பிறகு கைது செய்வது மட்டும் தீர்வு அல்ல. குற்றம் நடக்காமல் தடுப்பதே உண்மையான காவல். அதற்கு ரோந்து, கண்காணிப்பு, போதைப் பொருள் ஒழிப்பு ஆகியவற்றில் இன்னும் தீவிர கவனம் தேவை.

2. விலைவாசி உயர்வு - அடுப்பு எரியுமா?

அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி, மளிகை - எதைத் தொட்டாலும் விலை ஏறிக்கொண்டே போகிறது. நடுத்தர குடும்பமே மாத இறுதியில் தடுமாறுகிறது என்றால், தினக்கூலி தொழிலாளியின் நிலை என்ன?

அரசு விலை கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுப்பதாக சொல்கிறது. ஆனால் அது சந்தைக்கு வருவதில்லை. விலைவாசி என்பது வெறும் பொருளாதார பிரச்சனை அல்ல, அது ஒவ்வொரு குடும்பத்தின் வயிற்றுப் பிரச்சனை. விவசாயிக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும், அதே நேரத்தில் நுகர்வோருக்கும் கட்டுப்படியான விலை இருக்க வேண்டும். இந்த இரண்டுக்கும் இடையே சமநிலை கொண்டு வருவதுதான் நல்ல நிர்வாகம்.

3. மந்த நிலையில் வளர்ச்சி திட்டங்கள்

சாலைகள், பாலங்கள், குடிநீர் திட்டங்கள், புதிய தொழிற்சாலைகள் என பல திட்டங்கள் அறிவிக்கப்படுகின்றன. ஆனால் அவை ஆமை வேகத்தில் உள்ளது. அறிவிப்பு என்பது வளர்ச்சி அல்ல. அடிக்கல் நாட்டுவது வளர்ச்சி அல்ல. மக்கள் பயன்படுத்தும் போதுதான் அது வளர்ச்சி. அரசு அலுவலகங்களில் கோப்புகள் தேங்குவது, ஒப்பந்தங்களில் தாமதம், நிதி ஒதுக்கீட்டில் குழப்பம் - இவை எல்லாம் சேர்ந்து தமிழகத்தின் வளர்ச்சியை மந்தமாக்கிறது. இளைஞர்களுக்கு வேலை வேண்டும். வேலை கிடைக்க வேண்டும் என்றால் தொழில் வளர்ச்சி வேண்டும். தொழில் வளர்ச்சி வளர வேண்டும் என்றால் அடிப்படை கட்டமைப்பு வேகமாக முடிய வேண்டும்.

நமது வேண்டுகோள்;-

நாம் யாரையும் குறை சொல்வதற்காக இதை எழுதவில்லை. தமிழகம் நன்றாக இருக்க வேண்டும் என்ற அக்கறையில் எழுதுகிறோம். ஆளும் அரசு இந்த மூன்று விஷயங்களிலும் உடனடி கவனம் செலுத்த வேண்டும்:

1. சட்டம் ஒழுங்கை உறுதி செய்ய வேண்டும்
2. விலைவாசியை கட்டுப்படுத்த வேண்டும்
3. மந்தமாக உள்ள திட்டங்களை விரைந்து முடிக்க வேண்டும்



மக்கள் அரசியல் பேச்சை விரும்பவில்லை, நிம்மதியான வாழ்க்கையை விரும்புகிறார்கள். நேர்மையின் பாதை எப்போதும் மக்கள் பக்கம் நின்று, உண்மையை உரக்கச் சொல்லும்.

நன்றி!

– C. சந்தோஷ், ஆசிரியர்

குவாரிகளில் விதிமீறல் இயற்கை வளங்கள் கொள்ளையடிக்கப்படுகிறதா?



தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கனிம வளங்கள் வெட்டியெடுக்கப்படும் குவாரிகளில் விதிமீறல்கள் நடைபெறுவதாக எழுந்துள்ள புகார்கள், இயற்கை வளப் பாதுகாப்பு குறித்த கவலையை அதிகரித்துள்ளன. குறிப்பாக திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களில் செயல்படும் குவாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பல்வேறு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பொதுமக்களின் புகார்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் நேரடி கள ஆய்வுகளின் அடிப்படையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 29 குவாரிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 216 மனுக்களும் பரிசீலிக்கப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் 156 பக்கங்கள் கொண்ட விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. குவாரிகளில் கனிமங்கள் வெட்டியெடுக்கப்படும் முறைகள், அரசால் வழங்கப்பட்ட அனுமதிகள், சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இந்த ஆய்வில் இடம்பெற்றுள்ளன.

அனுமதிக்கப்பட்ட அளவை மீறி கனிமங்கள் வெட்டப்படுகிறதா?

குவாரிகளுக்கு அரசு அனுமதி வழங்கும்போது, குறிப்பிட்ட நிலப்பரப்பு, ஆழம், கனிமத்தின் அளவு, காலவரம்பு உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டே கற்கள் மற்றும் கனிமங்களை வெட்டியெடுக்க வேண்டும். ஆனால் சில இடங்களில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக கனிமங்கள் வெட்டியெடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

ஒரு குவாரிக்கு எவ்வளவு கனிமம் வெட்டியெடுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது, உண்மையில் எவ்வளவு கனிமம் வெட்டியெடுக்கப்பட்டுள்ளது, அதற்கான ராயல்டி மற்றும் அரசுக் கட்டணங்கள் முறையாகச் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதைக் கண்காணிப்பது அவசியமாகிறது. குவாரி உரிமையாளர்கள் சமர்ப்பிக்கும் உற்பத்திக் கணக்குகளையும், அதிகாரிகள் மேற்கொள்ளும் கள ஆய்வுகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் விதிமீறல்கள் குறித்த உண்மை நிலையை அறிய முடியும்.

வெடிப்புப் பொருட்களால் பாதிக்கப்படும் மக்கள் – பாதுகாப்பு கேள்விக்குறி

குவாரிகளில் பாறைகளை உடைப்பதற்காக அதிக சக்தி கொண்ட வெடிப்புப் பொருட்கள் பயன்படுத்தப்படுவது குறித்தும் ஆய்வறிக்கை கவலை தெரிவித்துள்ளது. கட்டுப்பாடற்ற வெடிப்புகளால் பாறைத் துண்டுகள் அருகிலுள்ள குடியிருப்புப்

பகுதிகளுக்குள் விழுதல், வீடுகளின் கூரைகள் சேதமடைதல், விவசாய நிலங்களில் பாதிப்புகள் ஏற்படுதல் போன்ற புகார்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக திருநெல்வேலி மாவட்டம் பிராஞ்சேரி பகுதியில் நடைபெற்றதாகக் கூறப்படும் வெடிப்புச் சம்பவங்களால் மரங்கள், வீடுகளின் கூரைத் தகடுகள் மற்றும் பாசனக் குழாய்கள் சேதமடைந்ததாக ஆய்வுக்குழு குறிப்பிட்டுள்ளது. குவாரிகளுக்கு அருகில் வசிக்கும் பொதுமக்களின் பாதுகாப்பு, கால்நடைகளின் வாழ்வாதாரம் மற்றும் விவசாயப் பணிகள் ஆகியவற்றிலும் இதன் தாக்கம் ஏற்படக்கூடும்.

வெடிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்போது அரசு நிர்ணயித்த பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா, குடியிருப்புப் பகுதிகளிலிருந்து போதுமான இடைவெளி பராமரிக்கப்படுகிறதா, வெடிப்புப் பொருட்கள் பயன்படுத்துவதற்கான உரிய அனுமதிகள் பெறப்பட்டுள்ளனவா என்பதைக் கண்காணிக்க வேண்டியது அவசியமாகும்.

நிலத்தடி நீர் பாதிப்பு – விவசாயத்தின் எதிர்காலம் என்ன ?

குவாரித் தொழிலால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்புகளில் நிலத்தடி நீர் குறைதல் முக்கியமான பிரச்சினையாகும். அதிக ஆழத்தில் பாறைகள் வெட்டியெடுக்கப்படுவதாலும், தொடர்ச்சியான வெடிப்புகளாலும் இயற்கையான நீர்ப்பாதைகள் மற்றும் நிலத்தடி நீர் அமைப்புகள் பாதிக்கப்படக்கூடும்.

குவாரிகளைச் சுற்றியுள்ள கிராமங்களில் கிணறுகள், ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் நீராதாரங்கள் வறண்டு போகின்றனவா என்பதை அறிவியல் அடிப்படையில் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. குறிப்பாக மழையை நம்பி விவசாயம் செய்யும் பகுதிகளில் நீராதாரங்கள் பாதிக்கப்பட்டால், விவசாயிகளின் வாழ்வாதாரமே கேள்விக்குறியாகிவிடும்.

மேலும், குவாரிகளில் இருந்து வெளியேறும் கல் தூசிகள் விவசாய நிலங்களில் படிவதால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுவதாகவும் புகார்கள் எழுந்துள்ளன. இதனால் விவசாய உற்பத்தி குறைதல், கால்நடைகளுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பொதுமக்களுக்கு ஏற்படும் சுவாசப் பிரச்சினைகள் குறித்தும் உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விவசாய நிலங்கள் மற்றும் பொதுச் சாலைகள் ஆக்கிரமிப்பு ?

குவாரிகள் செயல்படும் பகுதிகளில் விவசாய நிலங்களுக்குள் குவாரிப் பணிகள் விரிவடைவது, பொதுச் சாலைகள் சேதமடைவது போன்ற புகார்களும் ஆய்வறிக்கையில் இடம்பெற்றுள்ளன. கனரக வாகனங்கள் தொடர்ந்து செல்வதால் கிராமப்புறச் சாலைகள் சேதமடைவதுடன், பொதுமக்களின் போக்குவரத்துக்கும் இடையூறு ஏற்படுகிறது.

குவாரிகளுக்காக வழங்கப்பட்ட குத்தகை நிலத்தின் எல்லைகளைத் தாண்டி கனிமங்கள் வெட்டப்படுகின்றனவா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. இதற்காக அரசு நில அளவை ஆவணங்கள், குத்தகை வரைபடங்கள், செயற்கைக்கோள் படங்கள் மற்றும் தற்போதைய கள நிலவரம் ஆகியவற்றை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

குறிப்பாக குவாரிப் பணிகள் முடிவடைந்த பிறகு உருவாகும் ஆழமான பள்ளங்கள் முறையாக மூடப்படாமல் அல்லது பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படாமல் விடப்படுவது மனித உயிர்களுக்கும் கால்நடைகளுக்கும் ஆபத்தை ஏற்படுத்தக்கூடும்.

அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு – கணக்கெடுப்பு அவசியம்

குவாரிகளில் நடைபெறும் விதிமீறல்கள் சுற்றுச்சூழல் பாதிப்புகளுடன் மட்டும் முடிவதில்லை. அரசுக்கு கிடைக்க வேண்டிய வருவாயிலும் இழப்பை ஏற்படுத்தக்கூடும். அனுமதிக்கப்பட்ட அளவைவிட அதிகமாகக் கனிமங்கள் வெட்டியெடுக்கப்பட்டால், அதற்குரிய ராயல்டி, கனிம உரிமத் தொகை மற்றும் பிற கட்டணங்கள் அரசுக்குச் செலுத்தப்பட்டுள்ளனவா என்பதைச் சரிபார்க்க வேண்டும். இதற்காக ஒவ்வொரு குவாரிக்கும் வழங்கப்பட்ட அனுமதி, கனிமம் வெட்டியெடுக்கப்பட்ட அளவு, கனிமம் கொண்டு செல்லப்பட்ட வாகனங்களின் விவரங்கள், மின்னணு போக்குவரத்து அனுமதிச் சீட்டுகள் மற்றும் அரசுக்குச் செலுத்தப்பட்ட தொகைகள் ஆகியவற்றை ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட அளவுக்கும் உண்மையில் வெட்டியெடுக்கப்பட்ட அளவுக்கும் இடையே வேறுபாடு இருப்பது உறுதி செய்யப்பட்டால்,

அதற்கான வருவாய் இழப்பைக் கணக்கிட்டு சம்பந்தப்பட்டவர்களிடம் இருந்து சட்டப்படி வசூலிக்க வேண்டும். அதேபோல், விதிமீறல்கள் தொடர்பாக ஏற்கெனவே விதிக்கப்பட்ட அபராதங்கள் வசூலிக்கப்பட்டுள்ளனவா என்பதையும் அரசு வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும்.

431 குவாரிகளில் ஆய்வு – 155 இடங்களில் விதிமீறல்கள் கண்டுபிடிப்பு

இதற்கிடையே, தமிழகத்தில் குவாரிகளில் விதிமீறல்கள் நடைபெறுவதாகத் தொடர்ந்து புகார்கள் எழுந்ததைத் தொடர்ந்து, இயற்கை வளங்கள் துறை சார்பில் மாநிலம் முழுவதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

2026 மே மாத இறுதியில் வெளியான தகவலின்படி, ஆய்வு செய்யப்பட்ட 431 குவாரிகளில் 155 குவாரிகளில் விதிமீறல்கள் கண்டறியப்பட்டன. அவற்றில் 67 குவாரிகளின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதுடன், அபராத நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டன. மேலும் 88 குவாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதேபோல், அனுமதியின்றி கனிமங்களை எடுத்துச் சென்றதாக 469 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன், 78 இடங்களில் சட்டவிரோத கனிம அகழ்வு கண்டறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. குவாரிகளைக் கண்காணிக்க ட்ரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஆய்வு மேற்கொள்ளவும் அரசு திட்டமிட்டது.

இந்த நடவடிக்கைகள் குவாரித் துறையில் கண்காணிப்பை வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன. இருப்பினும், தற்காலிகமாக நிறுத்தப்பட்ட குவாரிகள் மீண்டும் செயல்பட அனுமதிக்கப்பட்டனவா, விதிமீறல்களுக்கான அபராதங்கள் முழுமையாக வசூலிக்கப்பட்டனவா, சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு மறுசீரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதற்கான விவரங்களும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும்.

அரசு செய்ய வேண்டியது என்ன ?

குவாரிகளில் நடைபெறும் விதிமீறல்களைத் தடுக்க அவ்வப்போது ஆய்வு செய்வது மட்டும் போதுமானதல்ல. ஒவ்வொரு குவாரிக்கும் வழங்கப்பட்ட அனுமதி விவரங்கள், வெட்டியெடுக்கப்படும் கனிமங்களின் அளவு, சுற்றுச்சூழல் அனுமதிகள், அபராத நடவடிக்கைகள் ஆகியவை பொதுமக்கள் பார்வைக்கு வெளிப்படையாகக் கிடைக்க வேண்டும்.

மேலும், குவாரிகள் அமைந்துள்ள பகுதிகளில் நிலத்தடி நீரின் அளவு, காற்றின் தரம், சத்தத்தின் அளவு, விவசாய நிலங்களின் பாதிப்பு ஆகியவற்றைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். விதிமீறல்கள் உறுதி செய்யப்பட்டால் குவாரி உரிமையாளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணமும் வழங்கப்பட வேண்டும்.

குவாரி உரிமையாளர்களுக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் இடையே ஏதேனும் முறைகேடான தொடர்புகள் உள்ளனவா என்பதையும் சுயாதீனமாக விசாரிக்க வேண்டியது அவசியமாகிறது.

இயற்கை வளங்கள் யாருடைய சொத்து ?

கட்டுமானத் தொழில், சாலை மேம்பாடு, தொழில்துறை வளர்ச்சி உள்ளிட்ட தேவைகளுக்கு கற்கள் மற்றும் கனிம வளங்கள் அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் வளர்ச்சியின் பெயரில் இயற்கை வளங்கள் கட்டுப்பாடின்றி வெட்டியெடுக்கப்படுவதும், அதனால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

29 குவாரிகள் தொடர்பான ஆய்வில் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் குறித்து அரசு விரிவான விசாரணை நடத்தி, உண்மை நிலையை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். குவாரிகளுக்கு அனுமதி வழங்கிய அதிகாரிகள், அவற்றைக் கண்காணிக்க வேண்டிய துறைகள் மற்றும் விதிமீறல்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நிறுவனங்கள் ஆகியோரின் பொறுப்புகள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

இயற்கை வளங்கள் தனிநபர்களின் லாபத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டியவை அல்ல; அவை எதிர்காலத் தலைமுறைகளுக்கும் சொந்தமான பொதுச் சொத்துகள். அவற்றைப் பாதுகாப்பது அரசின் கடமை மட்டுமல்ல, சமூகத்தின் ஒட்டுமொத்தப் பொறுப்புமாகும்.

சொகுசுக்கு காட்டும் அக்கறையில் சிறிதாவது மக்கள் பாதுகாப்பில் இருக்கட்டும்!

விஜய்க்கு ஸ்டாலின் கண்டனம்



தமிழகத்தில் கடந்த இரண்டு மாதங்களாக கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை மற்றும் சிறுவர்கள் மாயமாகும் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகக் குற்றம்சாட்டியுள்ள திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பில் முதலமைச்சர் விஜய் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள பதிவில், தமிழகத்தில் த.வெ.க. ஆட்சியில் சட்டம் – ஒழுங்கு நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாக விமர்சித்துள்ளார். அண்மைக்காலமாகத் தொடர்ந்து நடைபெறும் குற்றச் சம்பவங்களால் பொதுமக்கள் அச்சத்தில் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலுக்கு முன்பு, தமிழகத்தின் நிலைமை குறித்து விஜய் தெரிவித்த கருத்துகளைச் சுட்டிக்காட்டிய ஸ்டாலின், தற்போது நிலவும் சூழலை முன்கூட்டியே கணித்துப் பேசியதைப் போல அவரது முந்தைய கருத்துகள் அமைந்துள்ளன எனக் கிண்டல் செய்துள்ளார். திரைப்படங்களில் அதிரடி நாயகனாகப் பார்த்து விஜய்க்கு வாக்களித்த மக்கள், குற்றங்களைத் தடுப்பதில் அவரது அரசு போதிய நடவடிக்கை எடுக்கிறதா எனக் கேள்வி எழுப்பத் தொடங்கியுள்ளதாகவும் விமர்சித்துள்ளார்.

மேலும், கோட் சூட் அல்லது பட்டுவேட்டி சட்டை அணிவதும், கான்வாய் வாகனங்களில் பயணிப்பதும் மட்டுமே முதலமைச்சரின் பணிகள் அல்ல என்று குறிப்பிட்டுள்ள அவர், ஆட்சிப் பொறுப்பின் உண்மையான கடமைகளை விஜய் உணர்ந்து செயல்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சருக்கான அலுவலகம் மற்றும் இல்லத்தைத் தயார் செய்வது தொடர்பான பணிகளைத் தவிர, த.வெ.க. ஆட்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் எதுவும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை என்றும் ஸ்டாலின் குற்றம்சாட்டியுள்ளார்.

தனது வசதிகள் மற்றும் சொகுசுகளுக்கு அளிக்கும் முக்கியத்துவத்தில் ஒரு பகுதியையாவது பொதுமக்கள், குறிப்பாகக் குழந்தைகளின் பாதுகாப்புக்கு முதலமைச்சர் அளிக்க வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகம் குற்றவாளிகளின் ஆதிக்கம் நிறைந்த பகுதியாக மாறுவதைத் தடுத்து நிறுத்தி, சட்டம் – ஒழுங்கைப் பாதுகாக்கவும், மக்களிடையே நிலவும் அச்சத்தைப் போக்கவும் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மு.க.ஸ்டாலின் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் ஜெ.இ. பத்மஜாவுக்கு, அதே மாவட்டத்தைச் சேர்ந்த தமிழக வெற்றிக் கழக (தவெக) சட்டமன்ற உறுப்பினர் சி. அருள் விக்னேஷ் ஆபாசமான வாட்ஸ்அப் குறுஞ்செய்திகளை அனுப்பியதாக எழுந்துள்ள புகார் தமிழக அரசியல் மற்றும் நிர்வாக வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மதுபோதையில் மாவட்ட ஆட்சியரின் அதிகாரப்பூர்வ இல்லத்திற்குச் சென்று அத்துமீறி நடந்துகொண்டதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகளை எம்.எல்.ஏ. மறுத்துள்ள நிலையில், தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்திருப்பது விவகாரத்தின் முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளது.

ஆட்சியருக்கு வந்ததாகக் கூறப்படும் ஆபாசக் குறுஞ்செய்திகள்!

கடந்த நவம்பர் 11ஆம் தேதி இந்த விவகாரம் தொடர்பான செய்திகள் ஊடகங்களில் வெளியாகின. இதற்கு முன்பும் எம்.எல்.ஏ. ஆட்சியரிடம் முறையற்ற வகையில் நடந்துகொண்டதாகவும், சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு மதுபோதையில் அவரது இல்லத்திற்குச் சென்றதாகவும் புகார்கள் தெரிவிக்கின்றன. இந்த விவகாரம் தொடர்பாக ஆட்சியர் தரப்பில் மூத்த அதிகாரிகளிடம் புகார் அளிக்கப்பட்டதாகவும், அவரது பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மாவட்ட நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் பெண் அதிகாரிக்கே இத்தகைய அச்சுறுத்தல் ஏற்பட்டதாகக் கூறப்படுவது, பெண் அரசு அதிகாரிகளின் பாதுகாப்பு மற்றும் பணிச்சூழல் குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

எம்.எல்.ஏ. மறுப்பு – அரசியல் பழிவாங்கும் முயற்சியா?

தன் மீதான குற்றச்சாட்டுகளை எம்.எல்.ஏ. அருள் விக்னேஷ் திட்டவட்டமாக மறுத்துள்ளார். மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் மீது தனக்கு மிகுந்த மரியாதை இருப்பதாகவும், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கைகள் மற்றும் மனுக்கள் தொடர்பான விவரங்களை மட்டுமே ஆட்சியரிடம் தெரிவித்ததாகவும் கூறியுள்ளார்.

மேலும், கள்ளக்குறிச்சி புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாகவும், அது தொடர்பாக முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு சென்றதாகவும் தெரிவித்துள்ளார். இந்த விவகாரத்தைத் திசைதிருப்பும் நோக்கில் எதிர்க்கட்சிகள் தன் மீது அவதூறு பரப்புவதாகவும், பொய்யான தகவல்களைப் பரப்புவோர் மீது காவல்துறையில் புகார் அளித்துள்ளதாகவும் விளக்கமளித்துள்ளார்.

அரசியல் கட்சிகள் கண்டனம் – விசாரணைக்கு வலியுறுத்தல்!

இந்த விவகாரம் வெளியானதைத் தொடர்ந்து திமுக, அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. பெண் மாவட்ட ஆட்சியருக்கு எதிராக இத்தகைய சம்பவம் நடைபெற்றதாகக் கூறப்படுவது கண்டிக்கத்தக்கது என்றும், சம்பந்தப்பட்ட எம்.எல்.ஏ. மீது உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளன.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, இந்த விவகாரத்தில் வழக்குப் பதிவு செய்து அரசியல் தலையீடின்றி விசாரணை நடத்த வேண்டும் எனக் கோரியுள்ளார். இருப்பினும், அரசியல் கட்சிகளின் குற்றச்சாட்டுகள் மற்றும் விளக்கங்களைக் கடந்து, உண்மையை ஆதாரங்களுடன் வெளிக்கொணர வேண்டிய பொறுப்பு காவல்துறைக்கே உள்ளது.

தேசிய மகளிர் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை!

இந்த விவகாரத்தில் முக்கியத் திருப்பமாக, நவம்பர் 15ஆம் தேதி தேசிய மகளிர் ஆணையம் (NCW) தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டது. நவம்பர் 11ஆம் தேதி வெளியான ஊடகச் செய்திகளின் அடிப்படையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆணையத் தலைவி விஜயா ரஹாத்கர், தமிழக டிஜிபி மகேஷ் குமார் அகர்வாலுக்குக் கடிதம்

எழுதி, மாவட்ட ஆட்சியர் மூத்த அதிகாரிகளிடம் அளித்ததாகக் கூறப்படும் புகார்கள் மற்றும் அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு நடத்த வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இந்த விவகாரத்தில் நியாயமான, பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், அரசியல் அல்லது வெளிப்புறத் தலையீடுகளுக்கு இடமளிக்கக் கூடாது என்றும் அறிவுறுத்தியுள்ளார். குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய டிஜிட்டல் ஆதாரங்களைப் பாதுகாத்து தொழில்நுட்ப ரீதியாக ஆய்வு செய்யவும், இதுவரை எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த விரிவான அறிக்கையை ஏழு நாட்களுக்குள் சமர்ப்பிக்கவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆளுநர் விளக்கம் கேட்டது – அதிகரிக்கும் நிர்வாக நெருக்கடி!

இந்த விவகாரம் தேசிய அளவில் கவனம் பெற்றுள்ள நிலையில், தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், நவம்பர் 16ஆம் தேதி தலைமைச் செயலாளர் எம். சாய் குமார் மற்றும் டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் ஆகியோரை நேரில் அழைத்து விளக்கம் கேட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் – எம்.எல்.ஏ. இடையிலான சர்ச்சை உள்ளிட்ட மாநிலத்தின் சட்டம்-ஒழுங்கு தொடர்பான விவகாரங்கள் குறித்து ஆளுநர் விளக்கம் கோரியிருப்பது, இந்தப் பிரச்சினையின் தீவிரத்தை மேலும் அதிகரித்துள்ளது. தேசிய மகளிர் ஆணையத்தின் விசாரணையும், ஆளுநரின் விளக்கம் கோரலும் தமிழக அரசின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மீது கவனத்தைத் திருப்பியுள்ளன.

புதிய பேருந்து நிலைய முறைகேடு புகாரும் விசாரிக்கப்படுமா?

தன் மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பின்னணியாக, கள்ளக்குறிச்சி புதிய பேருந்து நிலையக் கட்டுமானப் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக எம்.எல்.ஏ. தெரிவித்திருப்பதும் கவனிக்க வேண்டிய அம்சமாகும். பேருந்து நிலையக் கட்டுமானத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதி, ஒப்பந்தம் வழங்கப்பட்ட விதம், திட்ட மதிப்பீட்டின்படி பணிகள் நடைபெற்றுள்ளனவா, கட்டுமானத்தின் தரம் முறையாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்பவை விசாரிக்கப்பட வேண்டும்.

எம்.எல்.ஏ. மீதான குற்றச்சாட்டுகளும், அவர் முன்வைக்கும் பேருந்து நிலைய முறைகேடு புகாரும் ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தப்படாமல் தனித்தனியாக விசாரிக்கப்பட வேண்டும். ஒரு புகாரை மற்றொரு புகாரை மறுப்பதற்கான காரணமாகப் பயன்படுத்தக் கூடாது.

விசாரணையில் வெளிவர வேண்டிய உண்மைகள்!

ஆட்சியருக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் வாட்ஸ்அப் குறுஞ்செய்திகளின் அசல் பதிவுகள் உள்ளனவா, சம்பந்தப்பட்ட தொலைபேசி எண்கள் மற்றும் டிஜிட்டல் தடயங்கள் சரிபார்க்கப்பட்டுள்ளனவா, ஆட்சியரின் இல்லத்திற்குச் சென்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான சிசிடிவி காட்சிகள் மற்றும் சாட்சியங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளனவா என்பவை முக்கியமான கேள்விகளாக உள்ளன.

அதேபோல், ஆட்சியர் மூத்த அதிகாரிகளிடம் அளித்ததாகக் கூறப்படும் புகார்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது, அவரது பாதுகாப்பு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுக்கான நிர்வாகக் காரணங்கள் என்ன என்பதற்கும் தெளிவான பதில்கள் கிடைக்க வேண்டும். டிஜிட்டல் ஆதாரங்கள் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படுவதும், அவற்றின் உண்மைத்தன்மை தொழில்நுட்ப ரீதியாக உறுதிப்படுத்தப்படுவதும் அவசியம்.

சட்டத்தின் முன் அனைவரும் சமம்!

மாவட்ட நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பில் இருக்கும் பெண் ஆட்சியரின் கண்ணியத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வது அரசின் அடிப்படைக் கடமையாகும். அதே நேரத்தில், மக்கள் பிரதிநிதி ஒருவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளும் உரிய ஆதாரங்களின் அடிப்படையில் விசாரிக்கப்பட வேண்டும்.

அரசியல் கட்சிகளின் அறிக்கைகள், தனிப்பட்ட விளக்கங்கள் மற்றும் சமூக வலைதள விவாதங்களைக் கடந்து உண்மை வெளிவர வேண்டும். தேசிய மகளிர் ஆணையம் கேட்டுள்ள ஏழு நாள் அறிக்கையில் என்ன விவரங்கள் இடம்பெறப் போகின்றன, தமிழக காவல்துறை எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறது, ஆளுநர் கேட்ட விளக்கத்திற்கு அரசு என்ன பதில் அளிக்கப் போகிறது என்பவை தற்போது முக்கியக் கேள்விகளாக உள்ளன.

பெண் அரசு அதிகாரிகள் அரசியல் அல்லது அதிகார அழுத்தங்களுக்கு அஞ்சாமல் தங்களது பணிகளை மேற்கொள்ளும் சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதேபோல், எந்தப் பதவியில் இருப்பவராக இருந்தாலும் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆதாரமின்றி ஒருவரைக் குற்றவாளியாக்குவதும் தவிர்க்கப்பட வேண்டும். பெண் அதிகாரியின் கண்ணியம் காக்கப்படுவதுடன், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற அடிப்படை உண்மையும் நிலைநாட்டப்பட வேண்டும். வெளிப்படையான, அரசியல் தலையீடற்ற விசாரணை மட்டுமே இந்தச் சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

மக்களின் வரிப்பணம் முறையாகச் செலவிடப்படுகிறதா?



விடை தேடும் நேரம்!

மக்களின் வரிப்பணத்தில் செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா? ஒப்பந்தப் பணிகள் தரமாக நடைபெறுகின்றனவா? அரசின் நிதி நிர்வாகத்தில் குறைபாடுகள் உள்ளனவா? இத்தகைய கேள்விகளுக்கு விடை தேடுவதில் இந்தியத் தலைமைத் தணிக்கையாளர் (CAG) வெளியிடும் தணிக்கை அறிக்கைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

மக்களின் வரிப்பணம் – முறையாகச் செலவிடப்படுகிறதா?

சாலை, குடிநீர், கல்வி, மருத்துவம், விவசாயம், வீட்டு வசதி உள்ளிட்ட பல்வேறு துறைகளுக்கு மத்திய, மாநில அரசுகள் ஆண்டுதோறும் பெருமளவில் நிதி ஒதுக்குகின்றன. இந்த நிதி உரிய நோக்கத்திற்குச் செலவிடப்படுகிறதா, திட்டங்கள் காலத்திற்குள் நிறைவேற்றப்படுகின்றனவா, பொதுமக்களுக்கு அவற்றின் பயன் கிடைக்கிறதா என்பதை உறுதிப்படுத்துவது அவசியம்.

ஒரு திட்டத்திற்கு நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது என்பதாலேயே அது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டுவிட்டது என்று கூற முடியாது. ஒதுக்கப்பட்ட நிதி எவ்வாறு செலவிடப்பட்டது என்பதையும், பணிகளின் தரத்தையும் ஆய்வு செய்ய வேண்டும்.

சிஏஜி என்றால் என்ன? அதன் அதிகாரம் என்ன?

இந்திய அரசியலமைப்பின் 148 முதல் 151 வரையிலான பிரிவுகளின்படி இந்தியத் தலைமைத் தணிக்கையாளர் (Comptroller and Auditor General of India – CAG) செயல்படுகிறார். மத்திய, மாநில அரசுகளின் வரவு-செவுக் கணக்குகள், அரசு நிறுவனங்கள் மற்றும் நிதியுதவி பெறும் அமைப்புகளின் கணக்குகளைத் தணிக்கை செய்வது இவரது முக்கியப் பணியாகும்.

அரசு நிதி விதிமுறைகளின்படி செலவிடப்பட்டுள்ளதா, திட்டங்கள் எதிர்பார்த்த பலனை அளித்துள்ளனவா, தேவையற்ற செலவுகள் அல்லது நிதி இழப்புகள் ஏற்பட்டுள்ளனவா என்பன ஆய்வு செய்யப்படுகின்றன.

சிஏஜி அறிக்கைகள் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, பொதுக் கணக்குக் குழை உள்ளிட்ட சட்டமன்றக் குழுக்களால் ஆய்வு செய்யப்படுகின்றன. இதன் மூலம் அரசின் நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் ஏற்படுகின்றன.

ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படுகிறதா?

அரசுத் திட்டங்களில் நிதி ஒதுக்கீட்டுக்கும் உண்மையான செலவினத்திற்கும் இடையே

வேறுபாடு காணப்படுவது முக்கியமான பிரச்சினையாகும். சில திட்டங்களுக்கான நிதி முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் திருப்பி ஒப்படைக்கப்படுகிறது. சில நேரங்களில் நிதியாண்டின் இறுதியில் அவசரமாகப் பெருமளவு தொகை செலவிடப்படுகிறது.

தமிழ்நாட்டின் 2024–25ஆம் ஆண்டுக்கான நிதிநிலை தணிக்கை அறிக்கையில், நான்கு மானியக் கோரிக்கைகளின் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ.113.80 கோடி முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்றும், ரூ.26,104 கோடிக்கும் அதிகமான நிதி ஒப்படைப்புகள் நிதியாண்டின் கடைசி நாளில் மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய நிலைமைகள் நிதி திட்டமிடலில் உள்ள குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றன. எனவே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதா என்பதைவிட, அது எப்போது, எதற்காக, எவ்வாறு செலவிடப்பட்டது என்பதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

திட்டப் பணிகளின் தரம் – கள ஆய்வு அவசியம்!

அரசுத் திட்டங்களுக்குச் செலவிடப்படும் தொகைக்கு ஏற்ப பணிகள் தரமாக நிறைவேற்றப்பட்டுள்ளனவா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

குடிநீர்த் தொட்டிகள் அமைக்கப்பட்டதாகக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவற்றின் மூலம் மக்களுக்குத் தொடர்ந்து குடிநீர் கிடைக்கிறதா என்பதைச் சரிபார்க்க வேண்டும். அதேபோல், புதிதாக அமைக்கப்பட்ட சாலைகள் விரைவில் சேதமடைவது, வடிகால்கள் முறையாகப் பராமரிக்கப்படாதது, பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் கட்டிடங்கள் இருப்பது போன்ற குறைபாடுகளையும் ஆய்வு செய்ய வேண்டும்.





இதற்காகப் பணி நிறைவு அறிக்கைகள், அளவீட்டுப் புத்தகங்கள், தரப் பரிசோதனை அறிக்கைகள் மற்றும் கள ஆய்வு முடிவுகளை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

ஒப்பந்தப் பணிகளில் வெளிப்படைத்தன்மை உள்ளதா?

அரசுத் திட்டங்களின் பெரும்பாலான கட்டுமானப் பணிகள் ஒப்பந்த முறையில் மேற்கொள்ளப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் வெளிப்படையாகக் கோரப்பட்டனவா, தேர்வு செய்யப்பட்ட நிறுவனங்கள் விதிமுறைகளைப் பின்பற்றினவா, வழங்கப்பட்ட தொகைக்கு ஏற்ப பணிகள் நிறைவேற்றப்பட்டனவா என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

பணி முழுமையாக முடிக்கப்படுவதற்கு முன்பே பணம் வழங்கப்பட்டுள்ளதா, குறைவான பணிகள் மேற்கொள்ளப்பட்டும் முழுத் தொகை விடுவிக்கப்பட்டுள்ளதா என்பன போன்ற கேள்விகளுக்கும் விடை காண வேண்டும்.

ஒப்பந்தத் தொகையில் வேறுபாடு இருப்பது மட்டுமே ஊழலுக்கான ஆதாரமாகாது. ஆவணங்கள், தொழில்நுட்ப ஆய்வுகள் மற்றும் கள நிலவரங்களின் அடிப்படையிலேயே முடிவுக்கு வர வேண்டும்.

ஸ்மார்ட் சிட்டி, ஜல் ஜீவன் திட்டம் – மக்களுக்குப் பயன் கிடைத்ததா?

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்ட ஸ்மார்ட் சிட்டி, ஜல் ஜீவன் மிஷன் போன்ற முக்கியத் திட்டங்களின் உண்மையான பயன்களையும் மதிப்பிட வேண்டும்.

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் நகர்ப்புறக் கட்டமைப்புகள், போக்குவரத்து, குடிநீர் மற்றும்



கழிவுநீர் மேலாண்மை உள்ளிட்ட பணிகளுக்குப் பெருமளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் பொதுமக்களின் வாழ்க்கையில் எந்த அளவுக்கு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை ஆய்வு செய்ய வேண்டும்.

அதேபோல், ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் கிராமப்புறக் குடும்பங்களுக்கு வீடுதோறும் குடிநீர் இணைப்பு வழங்கப்படுவதே இலக்காகும். இணைப்பு வழங்கப்பட்டதாகக் கணக்குகள் தெரிவிப்பதற்கும், மக்களுக்கு அன்றாடம் பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதற்கும் இடையே உள்ள வேறுபாட்டைக் கண்டறிய வேண்டும். 2026 செப்டம்பர் 8ஆம் தேதி தமிழகச் சட்டமன்றத்தில் சிஏஜியின் ஏழு முக்கியத் தணிக்கை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றில் கல்வி உதவித்தொகைத் திட்டங்கள், மின்சார உற்பத்தி, அரசு பொதுத்துறை நிறுவனங்கள், ஜல் ஜீவன் மிஷன், ஸ்மார்ட் சிட்டி திட்டம் மற்றும் மாநில நிதிநிலை உள்ளிட்டவை இடம்பெற்றிருந்தன.

கல்வி, மருத்துவம், மின்சாரத் துறைகளிலும் ஆய்வு தேவை!

கல்வி உதவித்தொகைத் திட்டங்களில் தகுதியுள்ள மாணவர்களுக்கு உதவித்தொகை முறையாகச் சென்றடைந்துள்ளதா, மருத்துவமனைகளில் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் உரிய முறையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டும்.

மின்சாரத் துறையில் உற்பத்திச் செலவு, எரிபொருள் கொள்முதல், பராமரிப்புச் செலவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகளைச் சரிபார்க்க வேண்டும். அரசு பொதுத்துறை நிறுவனங்களின் கடன் சுமை, வருவாய் மற்றும் இழப்புகள் குறித்தும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

புலனாய்வு ஊடகங்களின் பொறுப்பு என்ன ?

சிஏஜி அறிக்கைகளில் இடம்பெறும் தகவல்களை வெளியிடுவதுடன் ஊடகங்களின் பணி முடிந்துவிடுவதில்லை. அதில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளின் பின்னணியையும் கள நிலவரத்தையும் ஆய்வு செய்ய வேண்டும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் ஒப்பந்த விவரங்கள், நிதி ஒதுக்கீடு, செலவினக் கணக்குகள் மற்றும் பணி நிறைவு அறிக்கைகளைப் பெறலாம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஒப்பந்ததாரர்கள், பயனாளிகள் மற்றும் நிபுணர்களின் கருத்துகளையும் கேட்டறிய வேண்டும். குற்றச்சாட்டுக்கு உள்ளாகும் தரப்பினரின் விளக்கங்களையும் உரிய முறையில் வெளியிட வேண்டும்.

மேலும், தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது, இழப்புகள் மீட்கப்பட்டுள்ளனவா என்பதையும் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

மக்கள் பணத்திற்குக் கணக்குக் கேட்பது ஜனநாயகக் கடமை!

அரசுத் திட்டங்களுக்குச் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும் மக்களின் பணம். எனவே, அந்தப் பணம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள மக்களுக்கு முழு உரிமை உள்ளது.

சிஏஜி அறிக்கைகள் சுட்டிக்காட்டும் குறைபாடுகள் மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நிதி இழப்புகளுக்குக் காரணமானவர்களைக் கண்டறிந்து பொறுப்பேற்கச் செய்ய வேண்டும். அரசின் நிதி நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

அரசுத் திட்டங்களின் வெற்றி என்பது ஒதுக்கப்படும் நிதியின் அளவில் இல்லை; அவற்றால் பொதுமக்களின் வாழ்க்கையில் ஏற்படும் முன்னேற்றத்தில்தான் இருக்கிறது. மக்களின் வரிப்பணம் எங்கே செல்கிறது, எப்படிச் செலவிடப்படுகிறது, யாருக்குப் பயனளிக்கிறது என்ற கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும்போதுதான் நல்லாட்சி உண்மையான அர்த்தத்தைப் பெறும்.



தவெக ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஆறு மாதங்களில் தமிழகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் கூறியதாவது:

தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் முதலமைச்சர் விஜய் நேரடியாகச் சென்று மக்களைச் சந்திக்க வேண்டும். ஒவ்வொரு தொகுதியிலும் நிலவும் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால், இடைத்தேர்தல் நடைபெற வாய்ப்புள்ள தொகுதிகளைத் தேர்ந்தெடுத்து நலத்திட்ட உதவிகளை வழங்குவது தேர்தல் நோக்கத்துடனான செயல்பாடாகவே தெரிகிறது.

ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்டுள்ள நிலையிலும், பல்வேறு மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சி அதிகரித்து வருகிறது. ஆனால், தமிழகத்தின் வளர்ச்சி 3 சதவீதமாக மட்டுமே இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு அரசின் நிர்வாகச் சீர்கேடே முக்கியக் காரணம். நிர்வாகத் திறனற்ற ஆட்சியால் மாநிலத்தின் வருவாய் பாதிக்கப்படுவதுடன், மக்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் சிக்கல் ஏற்படும் என்றார்.

தொடர்ந்து விலைவாசி உயர்வு குறித்து பேசிய அவர், தமிழகத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கட்டுக்கடங்காமல் அதிகரித்து வருவதாகக் கூறினார். குறிப்பாக, அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ.20 முதல் ரூ.25 வரை விலை உயர்ந்துள்ளதாகவும், சர்க்கரை கிலோவுக்கு ரூ.25 அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இதுதவிர பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், புளி உள்ளிட்ட மளிகைப் பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளதாகவும், ஒட்டுமொத்தமாக மளிகைப் பொருட்களின் விலை சுமார் 40 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.

தீபாவளி பண்டிகை நெருங்கும் நிலையில், ஆவின் தயாரிப்புகளின் விலையும் உயர்த்தப்பட்டிருப்பது ஏழை மற்றும் நடுத்தர மக்களுக்கு கூடுதல் சுமையை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் தவெக அரசு இருப்பதாக விமர்சித்த எடப்பாடி பழனிசாமி, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து, தேவையற்ற விவகாரங்களில் அரசு கவனம் செலுத்தி வருவதாகக் கூறினார். இறுதியாக, அனைவருக்கும் தனது தீபாவளி நல்வாழ்த்துகளையும் தெரிவித்தார்.



ரூ.1,020 கோடி டெண்டர் முறைகேடு!

முன்னாள் அமைச்சர் கே.என். நேரு மீது வழக்குப்பதிவு!



அரசு ஒப்பந்தங்களின் பின்னணியில் நடந்தது என்ன?

தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தப் பணிகள் தொடர்பாக எழுந்துள்ள முறைகேடு புகார் அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. சுமார் ரூ.1,020 கோடி மதிப்பிலான ஒப்பந்தப் பணிகளில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் கூறப்படும் புகாரின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் கே.என். நேரு உள்ளிட்ட 13 பேர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன. அரசு ஒப்பந்தங்கள் வெளிப்படையான போட்டி முறையில் வழங்கப்பட வேண்டிய நிலையில், குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு ஒப்பந்தங்களைப் பெற்றுத் தரும் வகையில் முன்கூட்டியே திட்டமிடப்பட்டதா என்ற கேள்வி இந்த விவகாரத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

டெண்டர் முறைகேடு புகாரின் பின்னணி

2021 முதல் 2025 வரையிலான காலகட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒப்பந்தப் பணிகள் இந்தப் புகாரின் மையமாக உள்ளன. சென்னை மாநகராட்சி, நகராட்சிகள் மற்றும் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள், கட்டுமானப் பணிகள், சமூகக் கழிப்பறைகள் மற்றும் பராமரிப்புப் பணிகள் தொடர்பாக முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஒப்பந்தங்களைப் பெற விரும்பும் நிறுவனங்களிடமிருந்து குறிப்பிட்ட சதவீதத் தொகை சட்டவிரோதமாக வசூலிக்கப்பட்டதாகவும், அந்தப் பணம் பல்வேறு நபர்கள் வழியாகப் பரிமாற்றம் செய்யப்பட்டதாகவும் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒப்பந்த மதிப்பில் 7.5 முதல் 10 சதவீதம் வரை வசூலா?

இந்த வழக்கில் முன்வைக்கப்பட்டுள்ள முக்கியமான குற்றச்சாட்டுகளில் ஒன்று, அரசு ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பில் 7.5 சதவீதம் முதல் 10 சதவீதம் வரை குறிப்பிட்ட தொகை வசூலிக்கப்பட்டதாகும். இந்தத் தொகை சில தகவல் பரிமாற்றங்களில் 'பார்ட்டி பண்ட்' (Party Fund) என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளதாக முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, ரூ.10 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்திற்கு 10 சதவீதம் வசூலிக்கப்பட்டிருந்தால், ரூ.1 கோடி சட்டவிரோதமாகப் பெறப்பட்டிருக்கலாம் என்பதே குற்றச்சாட்டின் அடிப்படை. இந்தப் பணம் நேரடியாக ஒரே நபரிடம் ஒப்படைக்கப்படாமல் இடைத்தரகர்கள், ஒப்பந்த நிறுவனங்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் பிற நபர்கள் வழியாகப் பரிமாற்றம் செய்யப்பட்டதா என்பதையும் விசாரணை அமைப்புகள் ஆராய்ந்து வருகின்றன.

டெண்டர் அறிவிப்புக்கு முன்பே நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டனவா?

பொதுவாக அரசு ஒப்பந்தங்களுக்கு முதலில் நிதி ஒதுக்கீடு, நிர்வாக அனுமதி, தொழில்நுட்ப மதிப்பீடு ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும். அதன் பின்னர் டெண்டர் அறிவிப்பு வெளியிடப்பட்டு, தகுதியான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள்

பெறப்பட்டு, விதிமுறைகளின்படி ஒப்பந்தம் வழங்கப்பட வேண்டும். ஆனால் இந்த வழக்கில், டெண்டர் அறிவிப்பு வெளியிடப்படுவதற்கு முன்பே குறிப்பிட்ட நிறுவனங்களின் பெயர்கள் ஒப்பந்தப் பணிகளுடன் தொடர்புபடுத்தப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. டெண்டர் திறப்பதற்கு முன்பே நிறுவனங்களின் பெயர்கள், ஒப்பந்த மதிப்புகள் மற்றும் பணம் வசூலிக்கப்பட வேண்டிய விவரங்கள் பரிமாறப்பட்டதாகக் கூறப்படும் தகவல்கள் இந்த வழக்கில் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மற்ற நிறுவனங்களுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்பட்டதா என்பதும் விசாரிக்கப்பட வேண்டிய அம்சமாக உள்ளது.

மாதவரம் பூஸ்டர் நிலைய ஒப்பந்தத்தில் எழுந்த சந்தேகம்



சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்தின் கீழ் மாதவரம் பூஸ்டர் நிலையத்தின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளை மூன்று ஆண்டுகளுக்கு மேற்கொள்வதற்கான ஒப்பந்தம் தொடர்பாகவும் முறைகேடு புகார் எழுந்துள்ளது. 2021 செப்டம்பர் 6-ஆம் தேதியிட்ட வாட்ஸ்அப் தகவல் பரிமாற்றத்தில், முன்னாள் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், ஒப்பந்தம் தொடர்பான விவரங்களை கவி பிரசாத்துக்கு அனுப்பியதாகக் கூறப்படுகிறது. அதில் சி அண்ட் டி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் நிறுவனத்தின் பெயரும், சுமார் ரூ.75 லட்சம் மதிப்பிலான பணியும் குறிப்பிடப்பட்டிருந்ததாக விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, டெண்டர் திறக்கப்படுவதற்கு 22 நாட்களுக்கு முன்பே இந்தத் தகவல் பரிமாறப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பின்னர் அந்த நிறுவனத்துக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டதாகவும் முதல் தகவல் அறிக்கை குறிப்பிடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மழைநீர் வடிகால் பணிகளில் பணப் பரிமாற்றக் குற்றச்சாட்டு

சென்னையில் மேற்கொள்ளப்பட்ட மழைநீர் வடிகால் கட்டுமானப் பணிகள் தொடர்பான தகவல் பரிமாற்றங்களும் இந்த வழக்கில் முக்கிய ஆதாரங்களாகக் கூறப்படுகின்றன. 2024 ஜூலை 30-ஆம் தேதியிட்ட வாட்ஸ்அப் உரையாடலில், மூன்று ஒப்பந்தப் பணிகளின் மொத்த மதிப்பு ரூ.525.31 லட்சம் எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாகத் தகவல் வெளியாகியுள்ளது. அவற்றுக்கான 'பார்ட்டி பண்ட்' என்ற பெயரில் ரூ.55.15 லட்சம் கணக்கிடப்பட்டிருந்ததாகவும், அதில் ரூ.15 லட்சம் செலுத்தப்பட்டு மீதமுள்ள ரூ.35.15 லட்சம் நிலுவையில் இருந்ததாகவும் கணக்கீட்டுத் தாளில் குறிப்பிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்தப் பணிகள் தொடர்பான டெண்டர் திறக்கப்படுவதற்கு முன்பே ஒப்பந்ததாரர் மற்றும் தொகை குறித்த விவரங்கள் பரிமாறப்பட்டனவா என்பதே விசாரணையின் முக்கியக் கேள்வியாக உள்ளது.

பல்வேறு நகராட்சிகளிலும் முறைகேடு நடந்ததா?

இந்தப் புகார் சென்னையுடன் மட்டும் நின்றுவிடவில்லை. திருப்பூர், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாராபுரம், பல்லடம், வெள்ளக்கோவில், கோபிச்செட்டிப்பாளையம், சத்தியமங்கலம் மற்றும் பவானி உள்ளிட்ட பல்வேறு நகராட்சிப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பணிகளிலும் முறைகேடுகள் நடைபெற்றதாக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. குடிநீர் திட்டங்கள், மழைநீர் வடிகால் பணிகள், நகராட்சி பள்ளிகளுக்கான கட்டுமானங்கள், சமூகக் கழிப்பறைகள் மற்றும் பிற உள்ளாட்சிப் பணிகள் தொடர்பான கணக்கீட்டுத் தகவல்கள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. ஒரே மாதிரியான வசூல் நடைமுறை பல்வேறு நகராட்சிகளில் பின்பற்றப்பட்டதா என்பதையும் விசாரணை அமைப்புகள் ஆராய வேண்டியுள்ளது.

செல்போனில் கிடைத்ததாகக் கூறப்படும் ரூ.11.98 கோடி கணக்கீடு

இந்த வழக்கில் டிஜிட்டல் ஆதாரங்கள் முக்கியப் பங்கு வகிப்பதாகக் கூறப்படுகிறது. கே.என். நேருவின் சகோதரர் கே.என். மணிவண்ணனின் செல்போனில் இருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் கணக்கீட்டுத் தாளில், பல்வேறு நபர்களிடமிருந்து பெறப்பட்ட

தொகைகள் மற்றும் பிறருக்கு வழங்கப்பட்ட தொகைகள் பதிவு செய்யப்பட்டிருந்ததாக முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்தக் கணக்கின்படி சுமார் ரூ.11.982 கோடி பெறப்பட்டதாகவும், ரூ.11.669 கோடி வழங்கப்பட்டதாகவும் பதிவுகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த இரு தொகைகளுக்கும் இடையிலான வேறுபாடு சுமார் ரூ.31.2 லட்சமாகும். இந்தக் கணக்கீட்டுத் தாளின் உண்மைத்தன்மை, அதில் இடம்பெற்றுள்ள நபர்களின் அடையாளம் மற்றும் பணப் பரிமாற்றங்களின் பின்னணி ஆகியவை விசாரணையில் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை.

13 பேர் மீது வழக்குப்பதிவு



இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் கே.என். நேரு, அவரது சகோதரர்கள் கே.என். மணிவண்ணன் மற்றும் என். ரவிச்சந்திரன், கவி பிரசாத், தனியார் நிறுவனங்களைச் சேர்ந்த சிலர், முன்னாள் அரசு அதிகாரிகள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் உள்ளிட்ட 13 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்களில் சிலர் ஒப்பந்த நிறுவனங்களுடன் தொடர்புடையவர்களாகவும், சிலர் அரசு நிர்வாகப் பணிகளில் பொறுப்பு வகித்தவர்களாகவும் குறிப்பிடப்பட்டுள்ளனர். ஒவ்வொருவரின் தனிப்பட்ட பங்கு என்ன, யார் பணம் பெற்றனர், யார் பரிமாற்றத்தில் ஈடுபட்டனர், யார் ஒப்பந்த முடிவுகளை எடுத்தனர் என்பவை தனித்தனியாக விசாரிக்கப்பட வேண்டிய அம்சங்களாகும்.

அமலாக்கத் துறையின் 258 பக்க அறிக்கை

இந்த விவகாரத்தில் அமலாக்கத் துறை தயாரித்த 258 பக்க அறிக்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது. 2025 டிசம்பர் 3-ஆம் தேதி தமிழக அதிகாரிகளிடம் சமர்ப்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் இந்த அறிக்கையில், சுமார் 300 புகைப்படங்கள் மற்றும் டிஜிட்டல் தகவல்கள் தொடர்பான விவரங்கள் இடம்பெற்றுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. செல்போன்களில் இருந்து மீட்கப்பட்ட வாட்ஸ்அப் உரையாடல்கள், ஒப்பந்தப் பணிகளின் மதிப்பீட்டுத் தகவல்கள், பணம் பெறப்பட்டதாகக் கூறப்படும் விவரங்கள், ஒப்பந்ததாரர்களின் பெயர்கள் மற்றும் கணக்கீட்டுத் தாள்கள் உள்ளிட்டவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. இந்த ஆவணங்களின் அடிப்படையில் லஞ்ச ஒழிப்புத் துறை விரிவான விசாரணையை மேற்கொண்டதாகக் கூறப்படுகிறது.

லஞ்ச ஒழிப்புத் துறையின் அடுத்தகட்ட விசாரணை

அமலாக்கத் துறையின் அறிக்கையைத் தொடர்ந்து தமிழக லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்து விசாரணையை முன்னெடுத்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. விசாரணையில் கைப்பற்றப்பட்ட செல்போன்களின் டிஜிட்டல் தடயவியல் ஆய்வு, வாட்ஸ்அப் தகவல்களின் உண்மைத்தன்மை சரிபார்ப்பு, ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் டெண்டர் பதிவுகளின் ஒப்பீடு, சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களிடம் விசாரணை, வங்கிப் பரிவர்த்தனைகள் மற்றும் பணத்தின் வழித்தடத்தைக் கண்டறிதல் போன்றவை முக்கியத்துவம் பெறுகின்றன. மேலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எடுத்த முடிவுகள், வழங்கப்பட்ட அனுமதிகள் மற்றும் ஒப்பந்தத் தேர்வு நடைமுறைகள் தொடர்பான ஆவணங்களும் ஆய்வு செய்யப்பட வேண்டியுள்ளது.

அரசு நிதிக்கு ஏற்பட்ட பாதிப்பு என்ன ?

இந்த வழக்கில் பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள மிக முக்கியமான கேள்வி, அரசு நிதிக்கு உண்மையில் எவ்வளவு இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதாகும். ரூ.1,020 கோடி என்பது ஒப்பந்தங்களின் மொத்த மதிப்பா அல்லது முறைகேடு மூலம் பெறப்பட்டதாகக் கூறப்படும் தொகையா என்பது தெளிவாகப் பிரித்துப் பார்க்கப்பட வேண்டும். ஒப்பந்தப் பணிகள் சந்தை விலைக்கு ஏற்ப வழங்கப்பட்டனவா, பணிகளின் தரம் குறைக்கப்பட்டதா, அரசுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டதா, போட்டி நிறுவனங்களுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டதா என்பனவும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். இதற்காக ஒப்பந்த மதிப்பீடுகள், நிறைவேற்றப்பட்ட பணிகளின் அளவீட்டுப் பதிவுகள், பணம் வழங்கிய விவரங்கள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் ஒப்பிடப்பட வேண்டும்.

விசாரணையில் விடை கிடைக்க வேண்டிய முக்கியக் கேள்விகள்

டெண்டர் அறிவிப்பு வெளியாவதற்கு முன்பே குறிப்பிட்ட நிறுவனங்களின் பெயர்கள் எவ்வாறு முடிவு செய்யப்பட்டன? ஒப்பந்ததாரர்களிடமிருந்து உண்மையில் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது? அந்தப் பணம் யாரிடம் சென்றடைந்தது? அரசு அதிகாரிகளுக்கும் தனியார் நிறுவனங்களுக்கும் இடையே என்ன மாதிரியான தொடர்புகள் இருந்தன? செல்போன்களில் கிடைத்ததாகக் கூறப்படும் கணக்கீட்டுத் தாள்கள் உண்மையானவையா? வங்கிப் பரிவர்த்தனைகள் மூலம் பணத்தின் வழித்தடம் கண்டறியப்பட்டுள்ளதா? ஒப்பந்தப் பணிகள் தரமாகவும் விதிமுறைகளின்படியும் நிறைவேற்றப்பட்டனவா? இந்தக் கேள்விகளுக்கான ஆதாரபூர்வமான பதில்களே வழக்கின் உண்மையான பின்னணியை வெளிக்கொண்டு வர உதவும்.

வெளிப்படைத்தன்மையை உறுதி செய்யுமா இந்த விசாரணை ?

அரசின் நகராட்சி நிர்வாகத் துறை பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையுடன் நேரடியாகத் தொடர்புடைய முக்கியமான துறையாகும். குடிநீர், சாலை, மழைநீர் வடிகால், கழிப்பறை மற்றும் நகர்ப்புற அடிப்படை வசதிகளுக்காக அரசு பெருமளவு நிதி ஒதுக்குகிறது. இந்த நிதி முறையாகச் செலவிடப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பது அரசின் கடமை மட்டுமல்ல; பொதுமக்களின் உரிமையும் ஆகும். ஒப்பந்தங்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டு குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு மட்டுமே வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தால், அது அரசின் கொள்முதல் நடைமுறையின் நம்பகத்தன்மையையே கேள்விக்குறியாக்கும். எனவே, இந்த வழக்கில் உள்ள ஆவணங்கள், டிஜிட்டல் ஆதாரங்கள், பணப் பரிமாற்றங்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களின் பங்கு ஆகியவை முழுமையாக விசாரிக்கப்பட வேண்டும்.

உண்மையை வெளிக்கொண்டு வருமா புலனாய்வு ?

சுமார் ரூ.1,020 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்கள் தொடர்பாக எழுந்துள்ள இந்தப் புகார், தமிழகத்தில் அரசு ஒப்பந்தங்கள் வழங்கப்படும் நடைமுறைகள் குறித்த பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளது. ஒப்பந்தங்கள் வெளிப்படையான முறையில் வழங்கப்பட்டனவா, குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதா, சட்டவிரோதப் பணப் பரிமாற்றங்கள் நடைபெற்றனவா என்பதற்கு விசாரணை அமைப்புகள் தெளிவான பதில்களை அளிக்க வேண்டியுள்ளது. குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படாத நிலையில், யாரையும் குற்றவாளியாகக் கருத முடியாது. இறுதியாக, ஆதாரங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையிலேயே இந்த விவகாரத்தின் உண்மை நிலை தெரியவரும்.

Advertisement Tariff		
Full Page Color Back Wrapper	:	₹ 20,000/-
Full Page Color 1st Inner Wrapper	:	₹ 15,000/-
Full Page Color 2nd Inner Wrapper	:	₹ 15,000/-
Full Page Black & White	:	₹ 10,000/-
Annual Subscription	:	₹ 240/-

Administrative Office: **NERMAIYIN PAATHAI**
No.6, Tharika Illam F1, Prakasam 1st Cross Street,
Vijayalakshmi Puram, Ambattur, Chennai, Thiruvallur - 600053.
Cell: **6383454437** Email: **nermaiyinpaathai2026@gmail.com**



தமிழகத்தில் ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கும், கிராமப்புற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் ஒதுக்கப்படும் அரசு நிதி, தற்போது சைபர் குற்றவாளிகளின் இலக்காக மாறியிருப்பதாக வெளியாகியுள்ள தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிதிப் பரிவர்த்தனை இணையதளத்தில் அத்துமீறி நுழைந்து, சுமார் ரூ.22.10 கோடி அளவிலான அரசுப் பணம் முறைகேடாகப் பரிமாற்றம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் நிர்வாக வட்டாரங்களில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அரசின் நிதிப் பரிவர்த்தனைகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு, வெளிப்படைத்தன்மையும் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படும் நிலையில், அரசுத் துறையின் அதிகாரப்பூர்வ இணையதளத்திலேயே இத்தகைய அத்துமீறல் நடைபெற்றதாகக் கூறப்படுவது பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. குறிப்பாக, கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வாறு வேறு கணக்குகளுக்குச் சென்றது என்பது குறித்து முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

46–க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகள்: திட்டமிட்ட சதியா ?

வெளியாகியுள்ள முதற்கட்டத் தகவல்களின்படி, ஊரக வளர்ச்சித் துறையின் நிதிப் பரிவர்த்தனை இணையதளத்தில் அத்துமீறி நுழைந்த மர்ம நபர்கள், முறையான பணப் பரிமாற்ற நடைமுறைகளைத் தவறாகப் பயன்படுத்தி அரசுப் பணத்தை வேறு வங்கிக் கணக்குகளுக்கு மாற்றியதாகக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் 46-க்கும் மேற்பட்ட பணப் பரிவர்த்தனைகள் நடைபெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரே நேரத்தில் மிகப்பெரிய தொகை மாற்றப்பட்டதா அல்லது பல்வேறு சிறிய பரிவர்த்தனைகளாகப் பிரித்து பணம் எடுக்கப்பட்டதா என்பது விசாரணையில் தெளிவுபடுத்தப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். 46-க்கும் மேற்பட்ட பரிவர்த்தனைகள் நடைபெற்றதாகக் கூறப்படும் நிலையில், ஒவ்வொரு பரிவர்த்தனையின் நேரம், தொகை, பணம் சென்ற வங்கிக் கணக்கு, பரிவர்த்தனைக்கு அனுமதி வழங்கிய மின்னணு அடையாளம் உள்ளிட்ட விவரங்கள் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இது தனிநபர் ஒருவரின் கணினி அல்லது கடவுச்சொல் திருடப்பட்டதால் ஏற்பட்ட சம்பவமா, இணையதளத்தின் தொழில்நுட்பப் பாதுகாப்பில் இருந்த குறைபாடு பயன்படுத்தப்பட்டதா அல்லது உள்நபர்களின் உதவியுடன் நடைபெற்றதா என்பதும் விசாரணையின் முக்கியப் பகுதியாக இருக்க வேண்டும்.

மூன்று ஊராட்சி ஒன்றியங்களின் கணக்குகள் பாதிப்பு!

இந்தப் பண மோசடி விவகாரத்தில் மூன்று ஊராட்சி ஒன்றியங்களின் நிதிக் கணக்குகள் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படுவது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அரசு நிதி ஒதுக்கீடு, கணக்குப் பராமரிப்பு மற்றும் பணப் பரிமாற்றம் ஆகியவற்றில்

பல்வேறு நிலைகளில் அதிகாரிகளின் கண்காணிப்பு நடைமுறைகள் இருக்கும் நிலையில், அவற்றைத் தாண்டி இத்தகைய மோசடி எவ்வாறு சாத்தியமானது என்ற கேள்வி எழுகிறது.

ஊராட்சி ஒன்றியங்களுக்கான நிதி என்பது சாலைகள் அமைத்தல், குடிநீர் விநியோகம், தெருவிளக்குகள் பராமரிப்பு, கழிவுநீர் வடிகால் வசதிகள், சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசியப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட வேண்டிய பொதுமக்களின் வரிப்பணம் ஆகும். இத்தகைய நிதி முறைகேடாகப் பரிமாற்றம் செய்யப்பட்டிருந்தால், அதன் பாதிப்பு அரசுக் கணக்குகளுடன் மட்டும் நின்றுவிடாது; கிராமப்புற மக்களின் அடிப்படைத் தேவைகளையும் பாதிக்கக்கூடும்.

வங்கிகளின் கண்காணிப்பு எங்கே ?

இந்தச் சம்பவத்தில் அரசுத் துறையின் இணையதளப் பாதுகாப்பு மட்டுமின்றி, பணம் பெறப்பட்டதாகக் கூறப்படும் வங்கிக் கணக்குகளின் பின்னணியும் தீவிரமாக ஆராயப்பட வேண்டும். அரசுத் துறையிலிருந்து பெருந்தொகை பணம் வழக்கத்திற்கு மாறாகப் பல்வேறு கணக்குகளுக்கு மாற்றப்படும்போது, வங்கிகளின் மோசடி தடுப்பு கண்காணிப்பு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்தனவா என்ற கேள்வி எழுகிறது.

